# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) கரூர் - 639 005.

## GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS), KARUR - 639 005.

(தேசியத் தர மதிப்பீட்டில் "A" தகுதி பெற்ற முதல்நிலைக் கல்லூரி)
(திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
(கல்லூரி இணையதள முகவரி : www.gackarur.ac.in)

# தகவலேடு (PROSPECTUS) - 2019-2020

**1. மாணவர் சேர்க்கை (எம்.ஏ., எம்.காம்.,எம்.எஸ்சி.,)**

**விண்ணப்பப் படிவங்கள் :**

1. விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் வேலை நாள்களில் நேரடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். முதுநிலை வகுப்புகளுக்குரிய விண்ணப்பத்தின் விலை ரூ.60/- (ரூபாய் அறுபது).

   தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ஒரு விண்ணப்பம் மட்டும் இலவசமாக வழங்கப்படும். சாதிச் சான்றிதழ் நகலைச் சமர்ப்பித்து, இலவச விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம்.

**2. இறுதி நாள் :**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரி அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டிய **இறுதி நாள் : 05.07.2019 மாலை 5.00 மணி.**

**3. கலந்தாய்வு விவரம் :**

பட்டமேற்படிப்புப் பாடங்களுக்கு நடைபெறும் கலந்தாய்வில் பங்குகொள்ளும் மாணவ, மாணவியர் இத்தகவலேட்டினை அழைப்புக் கடிதமாகக் கொண்டு, கலந்தாய்வு நடைபெறும் நாள்களில் காலை 9.30 மணிக்கு மூலச் சான்றிதழ்கள், அவற்றின் இரு நகல்கள், கடவுச் சீட்டு அளவுள்ள 2 புகைப்படங்கள் மற்றும் உரிய கட்டணத்துடன் கட்டாயமாகப் **பெற்றோர் அல்லது பாதுகாவலருடன்** கலந்து கொள்ள வேண்டும்.

**கலந்தாய்வு தேதிகள்**

| | |
|---|---|
| **அறிவியல் பாடப் பிரிவுகள்** | : **11.07.2019** |
| **கலை மற்றும் வணிகவியல் பாடப் பிரிவுகள்** | : **12.07.2019** |

**பட்ட மேற்படிப்பு முதன்மைப் பாடங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | எம்.ஏ. தமிழ் | | 8. | எம்.எஸ்சி. வேதியியல் | (ஆ.வ.) |
| 2. | எம்.ஏ. ஆங்கிலம் | | 9. | எம்.எஸ்சி. தாவரவியல் | (ஆ.வ.) |
| 3. | எம்.காம். வணிகவியல் | (ஆ.வ.) | 10. | எம்.எஸ்சி. விலங்கியல் | (ஆ.வ.) |
| 4. | எம்.ஏ. வரலாறு | (ஆ.வ.) | 11. | எம்.எஸ்சி. புவியியல் | (ஆ.வ.) |
| 5. | எம்.ஏ. பொருளியல் | (ஆ.வ.) | 12. | எம்.எஸ்சி. கணினி அறிவியல் | (ஆ.வ.) |
| 6. | எம்.எஸ்சி. கணிதம் | (ஆ.வ.) | | | |
| 7. | எம்.எஸ்சி. இயற்பியல் | (ஆ.வ.) | | | ( ஆ.வ. - ஆங்கில வழி ) |

## 4. விண்ணப்பிக்கும் முறை :

பட்டமேற்படிப்பிற்கான விண்ணப்பங்களை பாரதிதாசன் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புத் தேர்வு முடிவுகள் வெளியான 10 நாட்களுக்குள் உரிய சான்றுகளுடன் கல்லூரி முதல்வருக்கு அனுப்ப வேண்டும்.

## 5. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் :

| | | |
|---|---|---|
| 1. | இளநிலை பட்டத் தேர்வு மதிப்பெண் பட்டியல் | நகல் – 1 |
| 2. | சாதிச் சான்றிதழ் | நகல் – 1 |
| 3. | மாற்றுச் சான்றிதழ் | நகல் – 1 |
| 4. | தன் முகவரியிட்ட அஞ்சல் அட்டை | ஒன்று |
| 5. | ஆதார் அட்டை | நகல் – 1 |
| 6. | மேல்நிலைப்பள்ளி மதிப்பெண் சான்றிதழ் (+2) | நகல் – 1 |

பின்தங்கிய, பின்தங்கிய முஸ்லீம், மிகவும் பின்தங்கிய/சீர் மரபினர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின (BC, BC(M), MBC/DNC, SC, SC(A) and ST) விண்ணப்பதாரர்கள் ஒதுக்கப்பட்ட (Reserve) இடங்களுக்கு உரியவர் எனக் கருதப்பட வேண்டுமானால் விண்ணப்பத்தில் உரிய இடங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். கல்லூரி மாற்றுச் சான்றிதழில் உள்ள சாதியின் பெயரும் சாதிச் சான்றிதழில் உள்ள சாதியின் பெயரும் ஒன்றாக இருந்தால் மட்டுமே கல்லூரியில் சேர்க்கப்படுவர்.

## 6. விண்ணப்பதாரரின் தேர்வு :

அரசு ஆணையின்படி விண்ணப்பதாரர்கள் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் அரசு அறிவித்துள்ள இட ஒதுக்கீடு அடிப்படையில் பட்டமேற்படிப்பு வகுப்புகளுக்குத் தேர்வு செய்யப்படுவர். மதிப்பெண் தரவரிசைப் பட்டியல் (Rank List) அடிப்படையில் நேரடிச் சேர்க்கை நடைபெறும். கலந்தாய்வில் கலந்துகொள்ளும்போது மூலச்சான்றிதழ்கள் மற்றும் அவற்றின் இரண்டு நகல்கள் கொண்டு வரவேண்டும். கடவுச்சீட்டு அளவுள்ள இரண்டு புகைப்படங்கள் கொண்டு வரவேண்டும். மதிப்பெண் பட்டியல் தவறு எனக் கண்டுபிடிக்கப்பட்டால் கல்லூரிச் சேர்க்கை இரத்து செய்யப்படுவதுடன் மாணவர்மீது குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## 7. கல்வி உதவித்தொகை :

கல்வி உதவித்தொகை பெறுவதற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியரின் குடும்ப வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குக் குறைவாகவும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியரின் குடும்ப வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்குக் குறைவாகவும் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர் வருமான வரம்பின்றியும் அனைவரும் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம். அதற்கான வருமானச் சான்று வட்டாட்சியரிடமிருந்து பெற்று உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர் நலவாரியம் மூலம் வழங்கப்படும் உதவித்தொகைக்குச் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் மாணவ, மாணவியர் விண்ணப்பிக்க வேண்டும்.

## 8. கல்லூரிக் கட்டண விபரங்கள் :

கல்லூரியில் சேர அனுமதிக்கும்போது மாணவர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள் :

| கல்லூரி சிறப்புக் கட்டணம் ஆண்டிற்கு | | பல்கலைக்கழகக் கட்டணம் ஆண்டிற்கு | | இதரக் கட்டணம் ஆண்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| **ஆய்வகக் கட்டணம்** | | பல்கலைக்கழக விளையாட்டு | 300/- | செஞ்சிலுவை | 20/- |
| எம்.எஸ்.சி., (கணிதம் தவிர) | 30/- | | | | |
| | | இளைஞர் மேம்பாடு | 100/- | **சேர்க்கையின் போது** | |
| **தன்வைப்புக் கணக்கு 1** | | | | என்.எஸ்.எஸ். | 10/- |
| உடற்கல்வி | 100/- | குழுக் காப்பீட்டுத் தொகை | 25/- | | |
| மாணவர் பேரவை | 25/- | | | கொடிநாள் | 5/- |
| ஆண்டு மலர் | 20/- | | | | |
| நூலகம் | 10/- | **சேர்க்கையின் போது** | | பெற்றோர் ஆசிரியர் சங்கம் | 500/- |
| நாள்காட்டி | 10/- | மெட்ரிகுலேசன் | 100/- | | |
| எழுது பொருள் | 50/- | | | | |
| நுண்கலை | 10/- | | | மாணவரின் கல்லூரி அடையாள அட்டை | 50/- |
| பட்டமளிப்பு விழா | 25/- | | | | |
| கணினி அறிவியல் மாணவர்களுக்கு எழுது பொருள் | 100/- | பதிவுக் கட்டணம் அறிந்தேற்பு | 200/- | | |
| Audio & Visual | 10/- | பிற பல்கலைக்கழகம் | 750/- | | |
| **சேர்க்கையின் போது** | | வளர்ச்சிக் கட்டணம் | 40/- | **மொத்த கட்டணம்** | **2,545/-** |
| சேர்க்கைக் கட்டணம் | 5/- | பண்பாட்டுக் கட்டணம் | 50/- | | |

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குக் கல்லூரிச் சிறப்புக் கட்டணம் கிடையாது.

* கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

## 9. முதுநிலைப் பயில்திட்ட மாணாக்கர்களுக்கான கல்விக் காலம் :

பாரதிதாசன் பல்கலைக்கழகச் சேர்க்கை விதிகளின்படி பின்வரும் நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. The candidates who are admitted on or after 2018-2019 onwards will be allowed to complete the UG/PG Programmes within two years from the completion of programme.
2. In exceptional circumstance a further extention of one more year may be granted. The exceptional circumstances be spelt our clearly by the relevant statutory body concerned of the University..
3. During the extended period the student shall be considered as a private candidate and also not be eligible for ranking.

## 10. மாணவர் விடுதிகள் :

அரசுக் கல்லூரி மாணவ, மாணவியருக்கென்று ஆதிதிராவிடர் நலத்துறை விடுதியும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதிகளும் உள்ளன. இதன் விவரங்களை அவ்விடுதிக் காப்பாளர்களிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

## 11. பொதுக்குறிப்புகள் :

கல்லூரியில் சேர்வதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் உடனே கல்லூரி அலுவலகத்தில் கட்டணங்களைச் செலுத்திவிடவேண்டும். இல்லையேல் சேர்க்கை மறுக்கப்படும். சேர்க்கை குறித்து எந்தவிதக் கடிதத்தொடர்பும் விண்ணப்பதாரர்களுடன் மேற்கொள்ளப் படமாட்டாது.

இடம் : கரூர்.

முதல்வர்,
அரசு கலைக் கல்லூரி
(தன்னாட்சி), கரூர்.